**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 475/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name :பிரசாத்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21/02/2021 ம் தேதி மாலை 05.50 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.போது வயது 50, த/பெ சர்க்கரை கவுண்டர் என்பவரை அவருடைய நேசமணி என்ற உறவினர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 21.02.2021 –ம் தேதி மாலை 5 மணிளவில் அவரது வீட்டு அருகே ஒரு அடையாளம் தெரிந்த ஆண் நபர் செங்கல்லால் அடித்ததாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 2x1x1 cm கிழிந்த காயம் தலையில் இருந்தது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் 5 நாட்கள் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

4) 2x1x1 cm காயம் கிழிந்த நிலையில் மட்டும் இருந்ததா அல்லது ஆழமாக இருந்ததா என்றால் 1 செமீ அளவிற்கு ஆழமாக இருந்தது. மேற்படி காயம் கூரையிலிருந்து மோதும் போது இது போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சம்பவம் நடைபெறுவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்னரோ, பின்னரோ மேற்சொன்ன காயம் வேறு வகையில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். வேறு எந்த காயமும் இல்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 475/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : போது** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து JSWல் வேலை செய்கிறேன். என் சித்தப்பா பெருமாள் என்பவரிடம் இருந்து கோவிந்தராஜ் என்பவர் இடத்தை விலைக்கு வாங்கிவிட்டார். அந்த இடம் கூட்டு பட்டா என்ற வகையில் உள்ளது. அதில் எங்களுக்கு பாகம் உள்ளது. அந்த சமயம் பெரியாண்டிச்சி அம்மன் கோவில் விசேஷம் நடந்து வந்தது. அந்த வழக்கு மேட்டூர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு நான் தாக்கல் செய்ததாகும். அந்த இடத்தை கோவிலுக்கு வேலை செய்யும் போது எதிரி அந்த இடத்தை சுத்தம் செய்தார். 2) கடந்த 21.02.2021ம் தேதியன்று மாலை 5.30 மணிக்கு கோவிந்தராஜ் என்பவர் கோவிலை சுற்றி சுத்தம் செய்தார்கள். இது பற்றி நான் கேட்ட போது வழக்கு நிலுவையில் உள்ள போது ஏன் சுத்தம் செய்கிறீர்கள் என்று கேட்டேன். ஆஜர் எதிரி என்னை கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டார ஒலி பையா என்று திட்டினார். செங்கல்லை எடுத்து என் வலது பக்க தலை மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு வலது பக்க தோள்பட்டையில் கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார்.

3) அப்போது அருகிலிருந்த எங்கள் வீட்டில் இருந்து என் மனைவி வந்தார். என் அண்ணன் மனைவி தங்கமணி, நேசமணி, மகேந்திரன் ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். பிறகு நேசமணி என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) கோவிந்தராஜ் யாரிடமிருந்து இடம் வாங்கினார் என்றால் சித்தப்பா பெருமாளிடமிருந்து விலைக்கு வாங்கினார். எந்த ஆண்டு விலைக்கு வாங்கினார் என்றால் 7 ஆண்டுக்கு முன்பு விலைக்கு வாங்கினார். இந்த இடத்தில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று சொல்லி யார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் நான் தான் தாக்கல் செய்தேன்.

5) நான் தாக்கல் செய்த வழக்கு கோவிந்தராஜ் என்பவருக்கு தீர்ப்பானது என்றால் ஆமாம். நான் தற்போது மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வந்த பிறகு தான் சுத்தம் செய்தார் என்றால் ஆமாம். கோவில் இருந்த இடம் நீதிமன்ற தீர்ப்பிற்கு பின்னிட்டு கோவிந்தராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் கோவில் உள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் அந்த இடம் பெரியாண்டிச்சி அம்மன் கோயில் கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தமான இடம் என்று சொன்னால் சரியல்ல. கோயில் கூட்டு பட்டாவில் உள்ளது.

6) கோவிந்தராஜ் சம்பவ சமயத்தில் கோவிலுக்கு சொந்தமான இடத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தாரா அல்லது வேறு இடத்தை சுத்தம் செய்தாரா என்றால் கோவில் இடத்தில் சுத்தம் செய்த ஆட்களை கூட்டி வந்து எங்கள் இடத்தை சுத்தம் செய்தார். அந்த இடம் அவருக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பான நிலையில்

அதனை சுத்தம் செய்வதில் எனக்கு என்ன பிரச்சனை என்றால் என்னிடம் எந்த ஆதாரமும் காண்பிக்கப்படவில்லை. தீர்ப்பான நிலையில் அந்த இடத்தை சுத்தம் செய்யக்கூடாது என சொல்ல எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் அவ்வாறு இல்லை.

7) நான் மற்றும் என் மனைவி, எனது உறவினர் ஆகியோர் சேர்ந்து எதிரியை அடித்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. நான் எதிரி கொடுத்த வழக்கில் ஆஜராகினேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு சி.சி.65/2022 எண்ணில் என் மீது நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்திற்கு என் மனைவி எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் சத்தம் கேட்டு 10, 15 நிமிடத்தில் வந்தார்.

8) நேசமணி, கல்யாணி, மகேந்திரன் ஆகியோர் சம்பவயிடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தனர் என்றால் 5 நிமிடம் கழித்து வந்தார்கள். சம்பவயிடத்திற்கு மேற்படி நபர்கள் வருவதற்கு முன்பாகவே சம்பவம் நடந்ததா என்றால் ஆமாம். அவர்கள் வந்து சமாதானம் செய்தார்கள். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் தான் எதிரியை அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தினேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. என் மீது போடப்பட்ட வழக்கிலிருந்து தப்பிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 475/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 05.06.2025.**

| | |
|---|---|
| **Name : நேசமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொட்டனேரியில் குடியிருந்து JSWல் வேலை செய்கிறேன். அ.சா.1 என் சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் சின்ன தாத்தா பெருமாள் என்பவரிடம் இருந்து கோவிந்தராஜ் என்பவர் இடத்தை விலைக்கு வாங்கிவிட்டார். அந்த இடம் கூட்டு பட்டா என்ற வகையில் உள்ளது. அதில் எங்களுக்கு பாகம் உள்ளது. போது என்பவர் வழக்கு மேட்டூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

2) கடந்த 21.02.2021ம் தேதியன்று மாலை 5.30 மணிக்கு பெரியாண்டிச்சி அம்மன் கோவிலில் வேலை செய்த நபர்கள் வழக்கு நிலுவையில் உள்ள இடத்தை கோவிந்தராஜ் என்பவர் சொல்லி கோவிலை சுற்றி சுத்தம் செய்தார்கள். இது பற்றி போது கேட்ட போது வழக்கு நிலுவையில் உள்ள போது ஏன் சுத்தம் செய்கிறீர்கள் என்று கேட்டார். ஆஜர் எதிரி போது என்பவரை கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டார ஒலி பையா என்று திட்டினார். செங்கல்லை எடுத்து போது என்பவர் வலது பக்க தலை மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு போது என்பவரை வலது பக்க தோள்பட்டையில் கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார்.

3) அப்போது நான் 100 மீட்டர் தொலைவிலிருந்து சம்பவயிடம் சென்று போது என்பவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். சம்பவ சமயத்தில் கல்யாணி, தங்கமணி, மகேந்திரன் ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு கோவிந்தராஜ் என்பவருக்கு பாத்தியம் என்றால் வழக்கு நிலுவையில் தான் உள்ளது. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் 100 மீட்டர் தொலைவிலிருந்து சம்பவம் நடைபெறுவதை பார்த்தேன். என் அம்மா போன் செய்து சொன்னதன் பேரில் பார்த்தேன். மகேந்திரன் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் அங்கேயே இருந்தார். நான் போது, கல்யாணி, மகேந்திரன் ஆகியோர் எதிரியை அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் நான் ஆஜராகி வருகிறேன் என்றால் ஆமாம். ஆனால் அது பொய் வழக்காகும்.

5) அடிப்பட்டவரை நான் மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் மாலை 5.45 மணியிலிருந்து 6 மணிக்குள் அழைத்து சென்றேன். சம்பவம் சம்மந்தமாக போதுவை தவிர நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் சம்மந்தமாக மகேந்திரன் என்பவர் புகார் அளித்தார். நான் சொன்னவாறு அந்த இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும் நான் தான் அடித்து காயம் ஏற்படுத்தி அந்த வழக்கிலிருந்து தப்பிக்க என் சித்தப்பா போது புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தான் என் சித்தப்பாவை அடித்தார்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.